II.—ADJOURNMENT MOTION *Re.* SITUATION ARISING OUT OF ACCUMULATION OF PADDY STOCKS WITH SMALL AGRICULTURISTS IN THANJAVUR DISTRICT.

MR. CHAIRMAN: I have received notice of a motion under rule 43 of the Council Rules from Thiru G. Swaminathan, M.L.C., for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, namely, the serious situation that has arisen out of the accumulation of paddy stocks with the small agriculturists in the Thanjavur district (1) for want of purchasers at the controlled rate, (2) on account of non-purchase of the entire quantity tendered to them by the Government, and (3) the practice adopted by the merchant, asking for more quantity at the rate of Rs. 28·50 per 60 kilos per bag whereas the controlled rate is Rs. 28·50 per 57 kilos per bag.

I would like to know how this will come within the scope of the rules governing adjournment motions.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில்
தற்போது அறுவடை நடந்துகொண்டிருக்கிறது. சம்பா அறுவடை இப்போது
நடந்து வருகிறது. இன்னும் ஓரிரு வாரம் அல்லது 10 நாட்களுக்குள்
இந்த அறுவடை கொஞ்சம் மும்முரமான நிலையை அடையும். தற்போது
உணவு கண்ட்ரோலை நீக்கிவிட்ட பிறகு, எல்லா மாவட்டங்களிலும் பலன்
நன்றாக விளைந்திருப்பதை தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கள்
வரவேற்றாலும், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இந்த
உணவுப் பண்டங்களின் மீதான கண்ட்ரோலை நீக்கியும் பயன் ஏற்பட
வில்லை என்றே கருதுகிறோம். மாறாக பாதகம் தான் ஏற்பட்டிருப்பதாகக்
கருத வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம் தஞ்சை மாவட்டத்தி
லிருந்து யாராவது ஒருவர் 100 மூட்டை நெல்லை எடுத்துக்கொண்டு
வெளி மாவட்டத்திற்குப் போக வேண்டுமென்றால், அதில் 5 சதவீத
நெல்லை அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற விலைக்கு அரசாங்கத்திற்கு அளந்து
விட்டு, மற்ற பாதியைத் தான் கொண்டு செல்ல வேண்டும் என்று
உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக வெளி மாவட்டங்களி
p.m. 5-00 லிருந்து தஞ்சைக்கு வந்து அரிசி, நெல் வாங்கும் வியாபாரிகள் விவசாயி
களிடம் குறைந்த விலைக்கு நெல்லைக் கேட்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.
அதாவது அரசாங்கத்திற்கு தாங்கள் தரும் 5 சதவீத நெல்லின் மூலம்
ஏற்படுகிற நஷ்டத்தைச் சரிக்கட்ட விவசாயிகளிடமே குறைந்த விலைக்கு
நெல்லைக் கேட்கிறார்கள். அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் விலையை விட
1 ரூபாய் அல்லது 2 ரூபாய் குறைத்துக் கொடுக்கும்படி வியாபாரிகள்
கேட்கிறார்கள். அது மட்டுமல்ல ; ஒரு மூட்டைக்கு 6 கிலோ நெல்
கொடுங்கள், நாங்கள் அரசாங்க விலைக்கு வாங்குகிறோம் என்கிறார்கள்.
இதனால் அதிகமாக யார் பாதிக்கப்படுகிறார்கள் என்றால், தஞ்சை மாவட்டம்
முழுவதுமுள்ள சிறு நிலச்சுவான்தார்கள் தான். தஞ்சை மாவட்டத்தில்
உள்ள நிலச் சொந்தக்காரர்களின் மொத்த எண்ணிக்கை ஏறக்குறைய
18 லட்சம் பேர் என்றால், அதில் $17\frac{1}{2}$ லட்சம் பேர் 4 ஏக்கருக்கும் 5
ஏக்கருக்கும் குறைவான நிலம் வைத்திருப்பவர்கள் தான். அவர்கள்
எல்லாம் அறுவடையான நெல்லை கையில் இருப்பில் வைத்துக்கொண்டு,
பின்னால் விலை ஏறிய நேரத்தில் விற்க முடியாத நிலையில் இருப்பவர்கள்.
அறுவடையான நெல்லை உடனடியாக விற்றுத் தீர வேண்டிய அவசியத்தில்
இருக்கிறவர்கள். அவர்களிடம் போய் வியாபாரிகள் இப்படிக் கேட்கும்
போது, உழுது பயிரிட்ட அந்த விவசாயிகள் எல்லாம் அந்த வியாபாரிகள்
கேட்கிற விலைக்கே கொடுத்துத் தீர வேண்டிய கட்டாய நிலையில் இருக்
கிறார்கள், இதைத் தவிர அவர்கள் வேறு ஒன்றும் செய்ய முடியாது.
இதற்குக் காரணம் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இருக்கும் இந்த
உணவுக் கண்ட்ரோலால் ஏற்படுகிற பாதகம் தான். இதனால் ஏழை
விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இப்படிக் கஷ்டப்
படும் விவசாயிகளின் உதவிக்கு சர்க்கார் முன் வரவேண்டும். உணவு
உற்பத்தியை அதிகம் செய்கிற நாங்கள் கண்ட்ரோல் எடுக்கப்பட்டால்

27th January 1970] [திரு. ஜி. சுவாமிநாதன்]

தஞ்சை மாவட்டத்திலிருந்து நெல் எல்லா மாவட்டங்களுக்கும் செல்லும் நிலைமை வரும்; அப்போது விலை ஏறும், அதனால் லாபம் பெறலாம் என்று எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில், 50 சதவீத நெல்லை வியாபாரிகள் சர்க்கார் விலைக்கு அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டதன் காரணமாக, நியாயமான விலையை விட குறைந்த அளவுக்கே நெல்லை விற்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறோம். இதனால் இந்த மாவட்டத்திலுள்ள விவசாயிகள், இன்னும் உணவு உற்பத்தியில் அபிவிருத்தி காட்ட வேண்டும் என்று நினைத்தவர்கள், உற்சாகம் இழந்துவிட்டது மட்டுமல்லாமல், விவசாயிகளிடையே பெரிய அதிருப்தி வளர்ந்துள்ளது. இதை இப்படியே விட்டுவிட்டால், அதிகப்படியான அளவில் உணவு தானியங்களைக் குறைந்த விலைக்கு விவசாயிகள் விற்க வேண்டிய நிலை ஏற்பட்டு உணவு உற்பத்தியில் அவர்களின் நாட்டமும் குறைந்து போகும். இந்த நிலையை உடனடியாகத் தவிர்க்க வேண்டும். இதைச் செய்வது என்றால், ஒன்று அரசாங்கம் மற்ற மாவட்டங்களில் வைத்திருக்கும் 15 சதவீத லெவியைப் போல் தஞ்சை மாவட்டத்திலும் 50 சதவீத லெவியாகக் கொடுத்தால் தான் பிற மாவட்டங்களுக்கு எடுத்துப் போகலாம் என்பதை மாற்றி, 15 சதவீதம் கொடுத்தால் போதும் என்று குறைக்க வேண்டும். அல்லது தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் உபரி நெல்லை விற்க முன்வரும்போது, அரசாங்கம் அவ்வளவு நெல்லையும் அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு வாங்கிக் கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தற்போது கூட விவசாயிகளிடமிருந்து அரசாங்க விலையில் சர்க்கார் வாங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிவேன். இருந்தாலும் நான் அறிகிற வரை, அது "நெபுலஸ்" என்கிற நிலையில் தான் இருக்கிறது. நல்ல முறையில் அரசாங்கம் இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதற்குக் கொஞ்சம் காலம் ஆகும் என்று கூறப்படலாம். ஆனால் அதற்குள்ளாக நிலைமை மோசமாகப் போய்விடும் என்பதை நான் அரசுக்குத் தெரிவித்துக்கொண்டு, இப்படி உடனடியான அவசர நிலைமையை ஏற்படுத்தியுள்ள இந்த விவகாரம் குறித்து விவாதிக்க இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒரு மணி நேரம் ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையைக் குறித்து அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்ததற்காக அரசாங்கத்தின் சார்பில் உறுப்பினருக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். "வெளி மாவட்டங்களில் 15 சதவீத நெல்லைத்தான் அரசாங்க விலைக்கு வாங்குகிறீர்கள், ஆனால், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 50 சதவீதம் கேட்கிறீர்களே, அதனால் வியாபாரிகள் எங்கள் மாவட்டத்தில் நெல் வாங்கி வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்ல அச்சப்படுகிறார்கள், இதனால் விலை குறைந்துவிட்டது," என்றெல்லாம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நாம் சொல்லியிருப்பது எல்லாம் தஞ்சை மாவட்டதிலேயிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போகிறவர்கள் மட்டும்தான் 50 சதவீத நெல்லை அரசாங்க விலையில் அரசாங்கத்திற்குத் தர வேண்டும் என்பதுதான். உள்ளேயே விற்க வேண்டும் என்று எந்த விவசாயி கருதினாலும், அரசாங்கம எவ்வளவு நெல்லாக இருந்தாலும் வாங்குவதற்குத் தயாராக இருக்கிறது. அதற்காக ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. டி.சி.எம்.எப். மூலம் 500 வில்லேஜ் செண்டர்களும், எப்.சி.ஐ. மூலம் 35 கலெக்ஷன் செண்டர்களும், அது வல்லாமல் 133 ஆதரைஸ்டு ஏஜெண்டுகளும், அதற்கு மேல் தாலுக்கா, சப்–தாலுக்காக்களில் 18 அலுவலகங்களிலும் அதுவல்லாமல் சிவில் சப்ளைஸ் மூலம் நியமிக்கப்பட்டிருக்கிற மில்லர்ஸ் மூலமும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்று, நான்கு நாட்களுக்கு முன்புதான் அரசாங்கத் தலைமைச் செயலாளரையும், உணவுத் துறைச் செயலாளரையும் அனுப்பி வைத்து, அவர்கள் இதைப் பற்றி நன்கு பரிசீலித்து முடிவு செய்து வந்திருக்கிறார்கள். இதில் சங்கடம் எதும் இல்லை. விவ

சாயிகள் எவ்வளவு நெல் கொண்டுவந்து கொடுத்தாலும், அரசாங்கம் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறது. விவசாயிகள் அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற விலைக்குக் குறைந்த அளவில் யாருக்கும் விற்கவேண்டியதில்லை. அரசாங்கம் எப்போது வேண்டுமானாலும், எவ்வளவு நெல் கொடுத்தாலும் வாங்கிக்கொள்ளுவதற்குத் தயாராக இருக்கிறது. வெளி மாவட்டங்களுக்குக் கொண்டுபோக விரும்புகிற வியாபாரிகள்தான் 50 சத வீத நெல் தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, விவசாயிகளுக்கு அல்ல. அது கூட தமிழகத்தில் "பஃப்பர் ஸ்டாக்" அதிகமாக இருக்கவேண்டும் என்பதன் அடிப்படையில் தான் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே மீண்டும் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்கக் கொள்முதல் விலைக்கு விற்பதாக இருந்தால், எவ்வளவு நெல் இருந்தாலும், அரசாங்கம் வாங்கிக்கொள்ளத் தயாராக இருக்கிறது. உறுப்பினர் திரு சுவாமிநாதன் அவர்களையும் கேட்டுக்கொள்ளுவேன், அரசாங்கம் நிர்ணயித்த கொள்முதல் விலைக்கு நிறைய நெல் வாங்கிக் கொடுப்பாரானல், நான் அவருக்கு நன்றியுடையவனுக இருப்பேன். எனவே, இதைப் பற்றி விவாதிக்க சபையின் நடவடிக்கையை ஒத்திப்போட வேண்டிய அவசியமில்லை. நான் அரசாங்கத்தின் நிலையை விளக்கிச் சொல்லிவிட்டேன் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

The adjournment motion was not pressed.

III—CALLING ATTENTION TO HARDSHIP CAUSED TO AGRICULTURISTS OF RAMANATHAPURAM DISTRICT CONSEQUENT ON PROPOSED CONSTRUCTION OF DAM ACROSS THE VAIGAI RIVER

திரு. வி. தங்கபாண்டியன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் நரசிங்கபுரம் பகுதியில் புதியதாகக் கட்டப்படவிருக்கும் அணைக்கட்டினுல், வைகை அணைக்கட்டின் நீர்ப் பிடிப்புப் பகுதிக்குத் தண்ணீர் வருவது தடைப்படுத்தப்படும். அதனல் வைகை நீர்த் தேக்கத்திலிருந்து இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய அளவு தண்ணீர் கிடைக்காமல் கஷ்டத்திற்கு உள்ளாவார்கள் என்கிற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா : மதுரை மாவட்டம்,
5–10 பெரியகுளம் வட்டம், நரசிங்கபுரம் கிராமத்தில் வைகையாற்றின் குறுக்கே
p.m. அணை கட்டும் செயற்குறிப்பினுக்கு அரசு 1969-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் ரூ. 6.43 இலட்சம் செலவில் ஒப்புதல் அளித்துள்ளது. நரசிங்கபுரம் கிராமத்தின் எல்லைக்குள் வைகையாற்றின் குறுக்கே பெரிய அணை என்னும் அணைக்கட்டு ஒன்று இருந்தது. மேற்கண்ட அணையின் வலது பக்கமாக ஒரு வாய்க்கால் ஓடி நரசிங்கபுரத்தின் வலது பக்கமுள்ள சிறு குளம், பெரிய குளங்களுக்கு நீர் வழங்கி வந்தது. இந்த அணைக்கட்டு பல்லாண்டுகளுக்கு முன்னரே சிதைந்து ஆற்றின் நீர்ப் போக்கு புது வழியாக மாறி விட்டது. அணைக்கட்டில் சிதைந்த பகுதி செப்பனிடப்படவில்லை. ஆகையால் அணைக்கட்டில் ஆற்று நீரைத் தேக்கி குளங்களுக்குத் திருப்பி அனுப்ப இயலவில்லை. மூங்கிலியாறும் மேற்கண்ட அணைக்கட்டும் சேருமிடத்தில் ஒரு புதிய அணைக்கட்டு ஒன்றை எழுப்பி பழைய அணைக்கட்டை முந்தைய நிலைக்குக் கொண்டுவருவது தற்போதைய செயற்குறிப்பின் நோக்கம். வரத்துக்காலும் புதுப்பிக்கப்படும். விநாடிக்கு 19 கன அடி நீர் எடுத்துச் செல்லும் அளவுக்கு வரத்துக்காலை அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மதுரை மாவட்ட ஆட்சியர் இச் செயற்குறிப்புக்கு இணக்கம் அளித்துள்ளார். புதிய ஆயக்கட்டு பலனடைய இந்தச் செயற்குறிப்பில் வகை செய்யப்படவில்லை. பெரியகுளம் மற்றும் சிறு குளத்தின் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டுகள்தான் பலனடையும். வைகையாற்றில் நீர் பாயும் அளவை வைத்துக் கருதும்போது, மேற்கண்ட அணைக்கு விநாடிக்கு 19 கன அடி நீர்